# எழுச்சி
EZHUCHI

02.08.2020 ஞாயிற்றுக்கிழமை | இதழ் :02 | விலை : 30/= | மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com


அன்பான வாசகர்களுக்கு!
மனித வாழ்வியலில்
நிலையான நிறுவல் பெறமுடியாத
சமூக விஞ்ஞானத்தின் கூறுகளைத் தேடி,
உண்மையின் முன்
நடுநிலைமையென்பது கிடையாது
என்ற குறிக்கோளுடன்
"எழுச்சி"
பத்திரிகை மக்கள் மன்றில்!

# மக்கள் தீர்ப்பு யார் பக்கம்?

ஓகஸ்ட் 02

**எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யதார்த்தபூர்வமான முடிவுகளா? அறிவுபூர்வமானதும், தீர்க்கதரிசனமான முடிவுகளா? அல்லது உணர்ச்சிகளா அல்லது உணர்வுகளா? வெல்லப்போகின்றன...**

- மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!!
- சமஷ்டி
- ஒரு நாடு! இரு தேசம்!!
- சர்வதேச தலையீட்டுடன் தீர்வு!
- கிழமைக்கொரு கொள்கை!
- உதிரிகளாக நாமும் வெல்வோம்!

பக்.7

## நிராகரிக்கப்படும் வாக்குகளில் தமிழ் சமூகத்தின் அவதானம் தேவை!

ஓகஸ்ட் 02

ஒவ்வொரு மனிதனுடைய பெறுமதிமிக்க வாக்குரிமை, ஒவ்வொரு தேர்தலிலும் பெருமளவில் நிராகரிக்கப்படுவதை அனைத்து குடிமகனும், குறிப்பாக சமூக ஆர்வலர்களும், தலைவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டம், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக 2,679 வாக்குகள் பதிவாகியிருந்தன. இவ்வாறாக யாழ். மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளிலும் கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

பக்.7

## போதையற்ற எதிர்காலத்தை உருவாக்குவோம் - ஜனாதிபதி



ஓகஸ்ட் 02

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்தி, வரலாற்றுச் சிறப்புமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாக ஜனாதிபதிகோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனி ரஜமகா விகாரையின் முன்பாக இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்காலச் சந்ததிக்கு மிகவும் ஆரோக்கியமானதும், சிறப்பானதுமான வாழ்வியல் சூழலை உருவாக்குவதே எமது அரசாங்கத்தின் செயற்திட்டமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## தோண்டப்பட்டது தோல்வியில் முடிந்ததாம்

### சொல்லுகிறது ஈ.பி.டி.பி. !

ஓகஸ்ட் 02

**1990** ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊர்காவற்றுறை, கரம்பனில் ஈ.பி.டி.பியின் பிரதான முகாமாகச் செயற்பட்டிருந்த இடம் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு பொலிசாரால் தோண்டியது தோல்வியில் முடிவடைந்துள்ளது.

மனித எச்சங்களைத் தேடிய, தேர்தல்கால சேறுபூசும் நடவடிக்கையானது, தோல்வியில் முடிந்ததன் மூலம், தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்கு ஏமாற்றத்தை..

பக்.7






## வாக்குரிமையை அனைத்துத் தமிழர்களும் தவறாமல் பயன்படுத்த முன்வர வேண்டும்!

பாராளுமன்றில் தமிழர் பிரதிநிதித்துவமானது குறைந்துள்ள இத்தருணத்தில், யுத்தத்தினால் உயிரிழந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள் போன்றோரின் வாக்கு வீழ்ச்சியும், அலட்சியப்போக்கினால் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தாது, வீடுகளிலேயே இருந்துவிடுவதனால் சரியான பிரதிநிதிகளின் தேர்வில் மாற்றங்கள் நிகழக்கூடும். ஆகவே, அடுத்த ஐந்து வருடங்களுக்கு தம்மை ஆளப்போகும் தலைவர்கள் விடயத்தில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி, சரியான தலைமையைத் தெரிவுசெய்வதை ஒவ்வொரு குடிமகனும் உறுதிசெய்ய வேண்டும்.

எழுச்சி

தொலைபேசி இல.: 0772576536
மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com

# வெளுக்கின்றதா சாயம்?

வடக்கு - கிழக்குத் தமிழ்ச் சமூகத்தின் ஆளுமைமிக்கதான அரசியல், பொருளாதாரம், கல்வி, ஊடகவியல், சமூக அங்கீகாரம், சமயம்சார் கௌரவம் போன்ற சமூக பரிமாணங்களில் ஆளுமை அல்லது அதிகாரம் செலுத்தும் அரசியல் கட்சியொன்றின் செல்வாக்குச் சரிவானது அதன் தோல்வியைப் பறைசாற்றுகின்றது.

அவ்வாறு பார்க்கும் பொழுது, தமிழர் அரசியலில் கழுதையை கம்பத்தில் கட்டிவைத்து அதன் சார்பாக மக்கள் ஆணையைக் கேட்டால், எம் சார்பாக வாக்களித்து விடுவார்கள் என்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் நம்பிக்கை தகர்ந்து போயுள்ளது.

பதவி மோகங்களும், குழிபறிப்புக்களும், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், நிர்வாகத்திறன் படைத்தவர்கள், ஆளுமையான தலைமைகள் என்ற மாயைகள் மறைந்தோடி, மாற்றத்தைத் தேடும் தேசம் ஒன்றின் அரசியல் கலங்கரை விளக்கொன்று தூரத்தில் தெரிகிறது.

30 ஆண்டுகால அஹிம்சைப் போராட்டமும், 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டமும், முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்தின் பின்னரான 11 வருட தமிழர்களின் அரசியல் தலைமைத்துவமும், மொத்தமாக 71 ஆண்டுகளில் தோல்வியான அரசியல் உரிமைப் போராட்ட வரலாற்றைப் பதிவுசெய்துள்ளன.

இது தமிழர்கள் சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாகிவிட்டது. இவற்றிலிருந்து மீண்டெழுவதற்காக மக்களின் மனோபாவம் மாற்றம் ஒன்றை நோக்கி நகர்கின்றது அல்லது அதிகார மாற்றத்தைக் காணத் துடிக்கின்றது. தமது மீட்பர்கள் யார் என்று தேடுமளவிற்கு உடனடியாகக் கண்டுகொள்ளமுடியாத அரசியல் தலைமைத்துவ வெற்றிடமும், வெறுமையும் தமிழர் தாயகத்தில் நிலவுகின்றன.

இருந்த பொழுதிலும், வடக்கில் தம்மை அரசியல் ரீதியாக நிலைநிறுத்தி, அரசியல் உரிமை, அபிவிருத்தி, அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வு எனப் பேசிவரும் கட்சியின் நாதம், ஓங்கி ஒலிக்கும் போல் தென்படுகின்றது.

அரசியல் உரிமைக்கு அப்பால், அங்கவீனர்களான பொதுமக்கள், போராளிகள் அவர்கள்தம் வறுமை, அம்மக்களைப் பாடாய்ப்படுத்துகின்றன. அவர்களின் பெயரால் ஆட்சிக்கட்டில் ஏறியவர்களின் பாராமுகமும், செயற்திறனற்ற நிர்வாக முறைமையும், துன்பங்களுடனான காத்திருப்பு, அரசியல் அபிலாஷைகளுக்கு உரிய அங்கீகாரமும், தீர்வை எட்டமுடியாத போக்கும், சர்வதேசங்களை நம்பி ஏமாற்றப்பட்டமையும் மாற்றம் ஒன்றை நோக்கி மக்கள் மனங்கள் அங்கலாய்ப்பதாகத் தெரிகின்றது.

இந்த மாற்றத்திற்கான அலை, தம்மைத் தேசியத்தின் பாதுகாவலர்களாகக் காட்டிநின்ற அல்லது அம்முகமூடிகளைப் போட்டுக்கொண்டு, காலமெல்லாம் மக்களை ஏமாற்றி, தமது சுகபோகங்களை அனுபவித்துக்கொள்ளலாம் என்று கங்கணம் கட்டியவர்களின் அடிவயிற்றில் புளியைக் கரைத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வெகுஜன எழுச்சியானது, புல்லுருவிகளின் அரசியலைக் கேள்விக்குள்ளாக்குவதோடு, நிகழப்போகும் மாற்றத்திற்கான அலையில் அள்ளுண்டுபோகும் அரசியல் தலைமைகளை இன்னுமொரு அரசியலில் காணமுடியாத முகங்களாக இத்தேர்தல் இருக்கும் என்பது திண்ணம். காத்திருப்போம்!

**– ஆசிரியர்.**

# மாவீரன் சே குவேரா வாழ்வும்! மரணமும்!



**“என் அம்மாவின் மரணம் குறித்து, உறுதியான செய்தி வரும்வரை நான் ஒரு மாதத்தைக் கழிக்கவேண்டியிருந்தது.**

**- சே ”**

(சென்ற இதழின் தொடர்ச்சி.....)

செலியாவின் சொத்துக்களின் மூலமாகக் கிடைத்த வருமானத்திலேயே அக்குடும்பம் வாழ்ந்து வந்தது. செலியா தன்னுடைய தாயின் வழியில் புனித இருதய பள்ளியின் மூலமாக கத்தோலிக்கக் கல்வியைப் பெற்றிருந்தபோதிலும், அவருடைய சகோதரியின் சுதந்திரமான, முற்போக்கான, இடது சாரி நம்பிக்கைகள்தான் அவரை தனித்தன்மை வாய்ந்தவராக உருவாக்கின. ஒரு சோஷலிஸ்டாக, மத எதிர்ப்புள்ள பெண்ணியவாதியாக மாற்றின. அவர் இருபதுகளிலும், முப்பதுகளிலும் ஆர்ஜென்டீனப் பெண்கள் நடத்திய பல போராட்டங்களின்போது தனது வீட்டில் ஏராளமான கூட்டங்களை நடத்தினார். தனது திருமணத்திற்கு முன்பும் பின்பும், 1965ஆம் ஆண்டு மரணமடையும் வரையிலும் தனக்கென்று ஒரு தனிப்பட்ட அடையாளத்தைக் கொண்டவராகவே இருந்தார்.

விதிவிலக்கான இந்தப் பெண்தான் தனது மூத்த மகனின் வாழ்வில், அவர் 1955ஆம் ஆண்டு மெக்ஸிக்கோவில் பிடேல் காஸ்ரோவைச் சந்திக்கும் வரையிலுமாவது, மிக முக்கியமான தாக்கத்தை, உணர்ச்சிகரமான, அறிவுசார்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியவராக இருந்தார். வேறு யாரும் - குவேராவின் தந்தையோ, அவருடைய மனைவிகளோ அல்லது குழந்தைகளோ - செலியா வகித்ததைப் போன்ற முக்கியமான பாத்திரத்தை சேவின் வாழ்க்கையில் வசிக்கவில்லை. புற்று நோயின் நோய்க்கூறுகளுடனும், அச்சுறுத்தல்களுடனும் இருபது ஆண்டுகளாக வாழ்ந்துவரும், தன்னுடைய மகனுக்குத் தாயாக இருந்த காரணத்தால் தன்னுடைய மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு சிறையில் பல வாரங்கள் கழித்தவரும், போர்க்குணம் வாய்ந்தவரும், ஐந்து குழந்தைகளையும் தனது சொந்த முயற்சிகளால் வளர்த்த தாயுமான அவர், சே குவேராவின் மீது மிக ஆழமான செல்வாக்கைக் கொண்டிருந்தார். பின்நாட்களில், கஸ்ரோ மட்டும்தான், அதுவும் சேவும் அவரும் சேர்ந்து கழித்த குறுகிய காலத்தில் மட்டும், அவர் மீது இதேபோன்ற செல்வாக்கைச் செலுத்தினார். இருளின் நிரந்தர புகலிடமான கங்கோவில் தன்னுடைய தாயாரின் மரணத்தைப்பற்றி அவர் அறிந்தவுடன், தன் வேதனையை வெளிப்படுத்தி, அவர் கூறியது குவேராவின் வாழ்க்கையின் அவலத்தை தெளிவாகச் சித்தரிக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் போரின் மிகத் துயரமான செய்தியை மச்சாடோ வென்சுரா கொண்டுவந்தார். பியூனஸ் அயர்ஸுடன் மேற்கொண்ட ஒரு தொலைபேசி உரையாடலின் போது என் தாயாரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக அவரிடம் கூறப்பட்டுள்ளது. ஆனால், அச்செய்தி தெரிவிக்கப்பட்ட விதம், என்னைத் தயார்ப்படுத்துவதற்காகவே என்று என்னை நினைக்க வைத்தது. ஊகிக்கப்படக்கூடிய முடிவுகளுக்காகக் காத்திருந்தேன். ஆனால், ஏதோ தவறான செய்தி என்று தொடர்ந்தும் நம்பிக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட பரிதவிப்பில் என் அம்மாவின் மரணம் குறித்து, உறுதியான செய்தி வரும்வரை நான் ஒரு மாதத்தைக் கழிக்கவேண்டியிருந்தது. அதனால்தானோ என்னவோ நான் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு அவர் என்னைப் பார்க்க விரும்பினார். ஒருவேளை தன் உடல்நிலை குறித்து உள்ளுணர்வுகள் அவருக்கு இருந்திருக்க வேண்டும். ஆனால் என்னுடைய பயணம் ஏற்கனவே தொடங்கிவிட்ட நிலையில் என்னால் அவரைச் சந்திக்க முடியவில்லை. விடைபெறுவதாக எழுதி, நான் ஹவானாவில் விட்டுச் சென்ற கடிதம் அவருக்குக் கிடைக்கவில்லை. என் பயணம் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட பிறகுதான், ஒக்டோபர் மாதத்தில் அவருக்குக் கொடுக்கப்படவிருந்தது.

தாயிடம் விடைபெற முடியவில்லை. தாயின் இழப்பு தன்னிடம் ஏற்படுத்திய துயரத்தை முழுமையாக வெளிப்படுத்தவும் வாய்ப்பில்லை. ஆபிரிக்கப் புரட்சியும், வெப்பமண்டல நோய்களும், பழங்குடிகளுக்கு இடையிலான




சே குவேரா:
வாழ்வும் மரணமும் புத்தகத்திலிருந்து...
ஜோர்ஜ் ஜி.காஸ்டநாடா

முடிவுறாத மோதல்களும் அவ்வாய்ப்பு அவருக்குக் கிடைக்காமல் தடுத்துவிட்டன. முப்பத்தேழு வருடங்களுக்கு முன்பு சேவைப் பெற்றெடுத்த காரணத்தால், 1965இல் மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டு, தனது மரணப்படுக்கையில்கூட அமைதியிழந்து, பியூனஸ் அயர்ஸில் செலியா இறந்தார். தன்னுடைய சொந்த நாடாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு நாட்டிலிருந்தும், அடுத்தடுத்து வெளியேறிய குவேரா ஆபிரிக்காவின் மலைகளில் தனது தாயாருக்காகத் துக்கமடைய வேண்டியநிலை. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய மரணம். இரண்டு மரணங்களும் நெருங்கி இருந்தன.

விரைவில் சே சே என்று செல்லமாக அழைக்கப்படவிருந்த எர்னால்டோவின் பிறப்பைக் கண்ட ஆர்ஜென்டீனா 1928ஆம் ஆண்டிலும் தீவிரமாக வளர்ந்துகொண்டிருந்த ஒரு நாடாகவே இருந்தது. விரைவிலேயே மங்கி மறையப்போகின்ற பொருளாதாரவளமும், ஏன், அரசியல் வளமுங்கூட அப்போது மிகச் சிறப்பாகவே இருந்தன. இருபதுகளில் அந்நாடு ஒரு லத்தீன் அமெரிக்க நாட்டைப் போலன்றி, “வெள்ளைக் குடியேறிகள்” நிறைந்த பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் போலவே காட்சியளித்தது.

(தொடரும்..)




# சிந்தியுங்கள்! மக்களே!

புலத்திலிருந்து தருணி

உலகம் முழுவதும் வைரஸ் தொற்றினால், இயல்புநிலை மோசமடைந்துவரும் நிலையில், நமது நாட்டின் இயல்புநிலையும் பாதிக்கப்பட்டே உள்ளது. அன்றாடம் வேலை செய்து தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் குடும்பங்கள் ஒருநேர உணவுக்குக்கூட கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதற்கு வைரஸ் தாக்கம் ஒரு காரணியாக இருந்தாலும், மேலும் சில அரசியல் காரணிகள் இருக்கத்தான் செய்கின்றன.

குறிப்பாக, வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களாகிய நாம், 30 வருடத்திற்கு மேற்பட்ட யுத்தத்தினால் நமது வாழ்வாதாரங்களை இழந்து பாதிக்கப்பட்டு நிற்கின்ற சூழலில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 11 வருடங்களாகியும், மக்களின் வாழ்வாதாரத்தைப் பற்றிச் சிந்திக்காது, அரசியல் போட்டிகளிலும், உள்ளார்ந்த முரண்பாடுகளிலும், தமிழ் மக்களால் தேர்வுசெய்து பாராளுமன்றம் சென்ற தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்கின்றவர்களின் அரசியல் வழிநடத்தலும் ஓர் காரணமாகும்.




மக்களால் தேர்வுசெய்து பாராளுமன்றம் அனுப்பப்படும் இவர்கள் வாக்குவேட்டையின் போது, எமது மக்களின் குடியிருப்புக்களுக்கு நேரில் சென்றும், கூட்டங்கள் மூலமும் சந்திக்க முற்படுகிறார்கள். மறுதேர்தல் வரும்வரை அல்லது வாக்குக் கேட்டுச் செல்லும்வரை இம்மக்களைத் திரும்பிப்பாராததையே எமது மக்களும், எமது மண்ணும் இன்றுவரை கண்டுள்ளது. தேர்தல் காலங்களில் திடீரெனத் தோன்றும் இவர்கள், எந்தவித மக்கள் சேவையுமாற்றாது, தமது இனக்குரோத, இன அழிப்புப் பற்றியும், தமிழ் அரசியல் கைதிகள் பற்றியும், தமிழர் உரிமை பற்றியும், தமிழர் அரசியல்தீர்வு தொடர்பாக சர்வதேசத்தை நாடுவது பற்றியும், சமஷ்டி என்றும், போராளிகள் என்றும் எமது மக்கள் மத்தியில் தமது அரசியல் செயற்பாட்டில், தாமே எமது மக்களின் காவலர்கள் என்பது போலக் காட்ட முற்படுகின்றனர்.

காலங்காலமாக மக்களை ஏமாற்றும் இவர்களின் கைங்கரியத்தால், களைப்படைந்தவர்களாக எமது மக்கள் புதிய தொரு வரலாற்றை எழுதுவதற்கான சூழலை நோக்கி, இச்சுயநலவாத அரசியல் வாதிகளுக்கு எதிராக பாடம் கற்பிற்க முற்படுகிறார்கள்.

மிகப்பெரிய அழிவு யுத்தத்திலிருந்து மீண்டெழுந்த ஓர் இனத்தின் தலைவர்களாகச் செயற்பட வேண்டிய இவர்கள், தமக்குச் சொத்துச் சேர்ப்பதிலும், தமது சந்ததியினர்களுக்கு நிறைவானதொரு வாழ்வை ஈட்டவும், தமது உறவினர்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்தவும், தமது பதவிகளைப் பயன்படுத்திக் கொண்டார்களேயொழிய, தமது மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதார விடயங்களில் முன்னேற்றம், வறுமையின் பிடியிலிருந்து மீட்சி, வயிற்றுப் பசிக்குக்கூட வழிதெரியாத ஏதுநிலை என்பனவும் மாகாணங்களுக்கு வருகின்ற நிதி அரசியல் போட்டா போட்டிகளில் மத்திய அரசிற்கே திரும்பும் துர்ப்பாக்கிய நிலையும் தமிழ் சமூகத்தின் மத்தியில் கவலைக்குரிய விடயமாகவே பார்க்கப்படுகின்றது.



இவ்வாறானவர்களின் கபட நாடகத்தையும், ஏனைய மாயாஜாலக் கதைகளையும் கூறிக்கொண்டு, தேர்தல் காலங்களில் முதலைக் கண்ணீர் வடிக்க உங்களை நோக்கி வரும் இவர்கள் விடயத்தில், மக்களாகிய நீங்கள், உங்களுக்கிருக்கின்ற மிகப்பெரிய பலமான, வாக்குப் பலத்தின் ஊடாக சரியானதொரு பாடம் புகட்ட முன்வர வேண்டும்.

இந்த அழிவு யுத்தத்திலிருந்து, மக்களைப் பாதுகாப்பதோடு, தீர்க்க தரிசனமானதும், அரசியல் சாணக்கியம் மிக்கதுமான நகர்வினை, ஒரு சில தலைமைகள் முன்னெடுத்திருந்த பொழுதிலும் அல்லது தொடர்ந்து வலியுறுத்துவதின் ஊடாக அரசாங்கத்துடன் பேசி, மிகப்பெரும் மக்கள் பணியை முன்னெடுத்து, வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ள நிலையில், அவர்களின் கொள்கை நோக்கிப் பயணிக்கும் தேசியவாதிகள் அல்லது ஈழவாதிகள் இறுதியில் தாமும் இலங்கை அரசுடன் பேசிக்கொள்ளும் நிலைக்குள் வந்திருந்த பொழுதிலும், தமது அரசியல் நகர்வுகளுக்கு புது அர்த்தம் கற்பிக்க முற்படுவதோடு, 30 வருடங்களாக அக்கொள்கையுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்குக் கறைபூசவும் முற்படுகின்றார்கள்.

> **கபட நாடகத்தையும், ஏனைய மாயாஜாலக் கதைகளையும் கூறிக்கொண்டு, தேர்தல் காலங்களில் முதலைக் கண்ணீர் வடிக்க உங்களைநோக்கி வரும் இவர்கள் விடயத்தில், மக்களாகிய நீங்கள், உங்களுக்கிருக்கின்ற மிகப்பெரிய பலமான, வாக்குப் பலத்தின் ஊடாக சரியானதொரு பாடம்புகட்ட முன்வரவேண்டும்.**

மக்களே! இவ்வாறு உங்கள் முற்றங்களைத் தேடி, உங்களுடனேயே வாழ்ந்து, உங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுக்கின்றவர்களை நிச்சயம் நீங்கள் இனங்கண்டிருப்பீர்கள். அவ்வாறானவர்களுக்கு அரசியல் பலத்தை வழங்குவதன் ஊடாக, தனி மனிதர்களாகிய நீங்களும், இனமும் தலைநிமிர்ந்து சிந்தித்துச் செயற்படும் தருணமிது.

தற்போதைய உலக ஒழுங்கிற்கு அமைய ஆயுதப் போராட்டம் என்பது இலங்கையில் மட்டுமல்ல, எந்தவொரு நாட்டிலுமே வெற்றிபெற முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஆகவே, அரசியல் ரீதியான தந்திரோபாயமான முன்னெடுப்புக்களே எமது மக்களையும், அவர்களின் வாழ்விடங்களையும் பாதுகாப்பதற்கும், உரிமைகளை வென்றெடுப்பதற்கும், பறிபோன நிலங்களை, வளங்களை மீட்பதற்கும் சரியான பாதையும் தெளிவான அரசியல் நோக்குமாகும்.

தற்போதிருக்கின்ற மிக அவசரமான தேவை, மக்களின் அன்றாட வாழ்வில் சந்திக்கின்ற பட்டினிப் போராட்டத்தை இல்லாதொழித்து, கற்றோருக்குரிய வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்து, அவரவர் சொந்த நிலங்களில் நிம்மதியாக வாழுகின்ற நிலைமையை ஏற்படுத்திக்கொடுத்தலாகும். இதைச் சரியான வழியில் செய்துகொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதி யார்? அவரை மேலும் பலப்படுத்த மக்களாகிய நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? கபட அரசியலில் உங்களைத் தொலைத்துக்கொண்டு அடுத்த சந்ததியினரும் அழிவை நோக்கி நகரவும், வாழ்வாதாரங்களுக்காகக் கையேந்தவும், உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாக இலங்கைத் தீவில் தொடர்ந்தும் வாழ அனுமதிக்கப் போகின்றீர்களா?

வடக்கு - கிழக்கில் யுத்தத்தின் பின்னர் தாமே எமது இனத்தின் காவலர்கள் என்று சொல்லிக்கொண்டு, பல அரசியல் வாதிகளும், அரசியற்கட்சிகளும் முளைத்துள்ள இத்தருணத்தில், தம்மை வளர்த்துக் கொள்வதற்காக ஓடும் இவர்கள், பகட்டுக்காகவே மக்களின் உரிமை விடயங்களையும், வாழ்வாதார விடயங்களையும் கையிலெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இனங்கண்டு, தீர்க்கதரிசனமான அரசியல் பார்வையோடு செயற்பட முன்வரவேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை, இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, மக்களின் பறிபோன வாழ்விடங்களில் மீளக்குடியேற்றல், அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான சரியானதொரு தீர்வு போன்ற பிரச்சினைகளுக்கு யார் சரியான தீர்வைப் பெற்றுத்தரப் போகிறார்கள்? அதற்கான வேலைத்திட்டங்களை யார் முன்னெடுத்து வருகிறார்கள்? யாருடைய பாதை நம்பிக்கை தரக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான விடயங்களில் உங்கள் கையிலிருக்கும் மிகப்பெரும் பலமான வாக்கைச் சரியாகப் பயன்படுத்துவீர்களானால், ஒன்றுபட்ட இலங்கைக்குள் அமைதியையும், சுபீட்சத்தையும் நிம்மதியான வாழ்வையும் நீங்கள் முன்னெடுக்க முடியும்.

*சிந்தியுங்கள் மக்களே!*

உங்கள் பிழையான முடிவும், வாக்களிக்காது நீங்கள் தவறவிடும் அந்த ஒரு நாளும் உங்களுக்கு மாத்திரமல்ல உங்கள் சந்ததிக்கும் ஐந்து வருடத்திற்கான அரசியல் பின்னடைவு என்பதோடு, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் சிதறடிக்கும் என்பதைக் கருத்திற்கொள்ளுங்கள்.





தற்போது "வலிமை" என்ற படத்தில் போனிகபூருடன் அஜித் நடித்து வருகிறார்.

இந்நிலையில் போனிகபூர், அஜித் நடித்த "வாலி" மற்றும் "வரலாறு" ஆகிய படங்களைக் பார்த்து வியந்ததாகவும், அந்தப் படங்களை இந்தியில் மொழிமாற்றம் செய்ய விரும்பி, அதன் உரிமைகளைத் தற்போது வாங்கியிருப்பதாகவும் தகவல்கள் பரவிவருகின்றன.

முதலில் "வாலி" படத்தினை அவர் மொழிமாற்றம் செய்யவுள்ளார் என்று கூறப்படுகிறது. அந்தப் படத்தில் அவரது மகன் அர்ஜுன்கபூர் ஹீரோவாக நடிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது தமிழில் எஸ்பி.ஜனநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதி "லாபம்" எனும் படத்தில் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக சுருதிஹாசன் நடிக்கிறார். இப்படத்தில் இருந்து சில புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. அதில் விஜய் சேதுபதி நீண்ட தாடியுடனும் அதிக முடியுடனும் உள்ளார்.








உலகநாயகன் கமல் தொகுத்து வழங்கிய பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூன்றாவது பிரிவில் கலந்துகொண்டு பிரபலமானவர் லொஸ்லியா மரியநேசன்.

தமிழ் சினிமாவில் நாயகியாக வேண்டும் என்ற ஆசையுடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அவரின் ஆசைப்படியே தற்போது ஹர்பஜன்சிங்குடன் இணைந்து "பிரெண்ட்ஷிப்" என்ற படத்தில் நடித்துவருகிறார்.

# மாளவிகா




தமிழ் சினிமாவில் துணை நடிகையாக வலம் வருபவர் மீரா மிதுன்.

ஒரு சில படங்களில் நடித்துள்ள இவர் பிக்பாஸ் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சர்ச்சைக்குப் பெயர்போன நடிகையாக இருந்து வரும் இவர், அடிக்கடி சமூகவலைத்தளங்களில் எதையாவது பதிவிட்டு ரசிகர்கள் மத்தியில் திட்டு வாங்கிக்கொள்வதை வாடிக்கையாக வைத்துள்ளார்

நடிகர் தனுஷிற்கு பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவித்துள்ள "மாஸ்டர்" பட நடிகை மாளவிகா மோகனன், தனுசுடன் இணைந்து நடிக்க ஆவலாக உள்ளதாக தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# மீரா மிதுன்.







# கங்குலிக்கு சங்கா ஆதரவு

சர்வதேசக் கிரிக்கெட் கவுன்லின் (ஐ.சி.சி.) தலைவராக கடந்த 4 ஆண்டுகளாக பணியாற்றிய இந்தியாவைச் சேர்ந்த ஷசாங் மனோகரின் பதவிக்காலம் முடிவடைந்து அவர் அந்தப் பொறுப்பிலிருந்து வெளியேறியுள்ளார்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரை துணைத்தலைவர் இம்ரான் கவாஜா (ஹொங்கொங்) இடைக்காலத் தலைவராக செயற்படுவார் என்று அறிவிக்கப்படடுள்ளது.

ஐ.சி.சி.யின் தலைவர் பதவிக்கான போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரிய சேர்மன் கொலின் கிராவ்ஸ் முன்னணியில் இருக்கிறார்.

அதேசமயம் இந்திய கிரிக்கெட் வாரிய தலைவரும், முன்னாள் இந்திய அணித்தலைவர் சவுரவ் கங்குலியை ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு நிறுத்தினால் நன்றாக இருக்கும் என்று தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரிய இயக்குனர் கிரேமிசுமித் ஏற்கனவே கூறியிருந்தார். இந்நிலையில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கரா வும் கங்குலிக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளார்.



இந்த ஆண்டுக்கான போர்முலா 1 கார்ப் பந்தயத்தில் ஸ்பில்பேர்க்கில் நடந்த முதலாவது சுற்றில் ஆஸ்திரியா கிராண்ட்பிரியில் பின்லாந்து வீரர் வால்டெரி போட்டோஸ் (மெர்சிடஸ் அணி) வெற்றி பெற்றார்.

6 முறை சாம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் 4-வது இடத்துக்கு தள்ளப்பட்டார். இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பிரேசில், கனடா, மெக்சிகோ, அமெரிக்கா கிரண்ட் பிரிபந்தயங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு

# பிரான்ஸ் கோப்பை கால்பந்து போட்டி



பிரான்சில், பிராந்திய அணிகளுக்கிடையிலான பிரான்ஸ் கோப்பை கால்பந்து போட்டி இறுதி சுற்றில் பரிஸ் சென் ஜேர்மன் (பி.எஸ்.ஜி.)- சென் எடின்னே அணிகள் கடந்த சனிக்கிழமை இரவு மோதின.

விறுவிறுப்பான இந்த மோதலில் பி.எஸ்.ஜி. அணி 1 : 0 என்ற கோல் கணக்கில் எடின்னேவை தோற்கடித்து 13 வது முறையாக கோப்பையைக் கைப்பற்றியது. பி.எஸ்.ஜி. அணியின் நட்சத்திர வீரர் நெய்மார் 14 வது நிமிடத்தில் கோல் அடித்தார்.

எடின்னேதலைவர் லோக் பெரின் 31-வது நிமிடத்தில் எதிரணி வீரர் கிலியன் எம்பாப்பேவின் காலை முட்டியால் மிதித்து இடறிவிட்டதால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இந்தப் போட்டிகளில் மொத்தம் 29 கோல்கள் அடித்தவரான எம்பாப்பே அடுத்த மாதம் நடக்கவிருக்கும் ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் போட்டிகளில் ஆடுவது சந்தேகமாகியுள்ளது.



The SPORTS

# யுவராஜ்சிங் ஆதங்கம்!



T-20 கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் 6 சிக்சர்கள் விளாசியவர். 2007 ஆம் ஆண்டு இந்திய அணி T-20 உலக கோப்பையை வெல்வதற்கும், 2011 இல் 50 ஓவர் உலகக் கோப்பையை வெல் வதற்கும் முக்கிய காரணமாக இருந்தார்.

இவர் திடீரென சர்வதேச மற் றும் ஐ.பி.எல் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். இவருக்குப் பிரிவுபசார நிகழ்வைக்கூட நடத்தவில்லை. இந் நிலையில் பி.சி.சி.ஐ தன்னை தொழில் முறை வீரராக நடத்தவில்லை என்று யுவராஜ்சிங் தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்.



# T- 20 இலங்கையில் முதற்தடவை

இலங்கையில் முதற் தடவையாக இடம்பெறவுள்ள லங்கன் பிரீமியர் லீக் T- 20 போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அரங்கில் முதன்மை யான கிரிக்கெட் போட்டியான லங்கன் பிரீமியர் லீக் T- 20 கிரிக்கெட் தொடரை அடுத்த மாதம் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, லங்கன் பிரிமியர் லீக் போட்டிகள் ஓகஸ்ட் 28 தொடக்கம் செப்டெம்பர் 20 வரை இலங்கையிலுள்ள 4 சர்வதேச மைதானங்களில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பெண்ணியம்

## தமிழில் மனைவி என்னும் சொல்லுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்



துணைவி, கடகி, கண்ணாட்டி, கற்பாள், காந்தை, வீட்டுக்காரி, கிருகம், கிழத்தி, குடும்பினி, பெருமாட்டி, பாரியாள், பொருளாள், இல்லத்தரசி, மனையுறுமகள், வதுகை, வாழ்க்கை, வேட்டாள், விருந்தனை, உவ்வி, சானி, சீமாட்டி, சூரியை, சையோகை, தம்பிராட்டி, தம்மேய், தலைமகள், தாட்டி, தாரம், நாச்சி, பரவை, பெண்டு, இல்லாள், மணவாளி, மணவாட்டி, பத்தினி, கோமகள், தலைவி, அன்பி, எஜமானி, ஆட்டி, அகமுடையாள், ஆம்படையாள், நாயகி, பெண்டாட்டி, ஊழ்த்துணை, மனைத்தக்காள், வதூ, இல், காந்தை, பாரியை, மனைக்கிழத்தி, குலி, வல்லபி, வனிதை, வீட்டாள், ஆயந்தி, ஊடை.

# பெண் என்பவள்!



1. பெண் இறைவனின் படைப்புக்களில் எல்லாம் மேலானவள்.
2. எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகின்றார்களோ, அங்கு தேவதைகள் குடியேறும்.
3. ஒரு பெண்ணைப் படிக்கவைப்பது, ஒரு குடும்பத்தையே படிக்கவைப்பதற்கு நிகரானது.
4. பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றிற்கும் விளக்கு.
5. உலகத்தின் உன்னதமான பொருள், பரிபூரணமடைந்த பெண்ணே.
6. நாகரிகம் உண்டாக்கத்தக்க நிச்சயமான வழி பெண்ணின் செல்வாக்குத்தான்.
7. பெண்ணின் அன்பும், பரிவும் எங்கிருக்கிறதோ, அங்கு ஆடையும், பண்பும் அடைக்கலம்.
8. பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை.
9. பெண்ணின் வாழ்வு அன்பின் சரித்திரம்.
10. சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண்.
11. அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமை உடையது.
12. பொய்மை, கோழைத்தனம், கீழ்க்குணம் ஆகிய மூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை.

**கிருஷா - செங்கலடி.**

# மருத்துவக் குறிப்பு



◆ தேனை தினமும் வெந்நீரிலோ, பாலிலோ சிறிதளவு கலந்து குடித்துவர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். நாள்பட்ட இருமல், சளி என்பன குணமாகும்.

◆ இரவில் தினமும் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் சிறிதளவு வெந்நீரை அருந்தி, பின் படுக்கைக்குச் செல்ல வேண்டும். நீரிழிவு நோய் இல்லாதவர்கள் சிறிதளவு சர்க்கரை அல்லது சீனி சாப்பிடலாம்.

◆ அறுகம்புல்லைச் சாறாகவோ அல்லது பொடியாகவோ வாரம் ஒருமுறை சேர்த்துக் கொண்டால், இரத்தம் சுத்தமாவதுடன், உடல் உஷ்ணமும் தணியும்.

◆ உடல் வெளுப்பு மற்றும் தேமல் குணமாக வெள்ளைப் பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து, தினமும் தேய்த்துக் குளித்துவர குணமாகும்.

◆ வெந்தயத்தைத் தொடர்ந்து உணவில் சேர்த்து வந்தால், உடல் சூட்டைத் தணித்து, குளிர்ச்சியை ஏற்படுத்துவதுடன், தேவையற்ற ஊளைச்சதைகள் மற்றும் கொழுப்புக்கள் முற்றிலும் குறைவடையும். மேலும், நீரழிவு நோயைக் கட்டுப்படுத்துவதுடன், மலச்சிக்கல் மற்றும் வாய்வுப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

◆ அரைத் தேக்கரண்டி மிளகுத்தூள், மூன்று தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு, ஒரு கப் தண்ணீர் மற்றும் ஒரு தேக்கரண்டி தேன் இவை அனைத்தையும் நன்றாகக் கொதிக்க வைத்து, காலை வேளை வெறும் வயிற்றில் மூன்று தொடக்கம் நான்கு மாதங்கள் தொடர்ந்து குடித்து வந்தால், உடல் எடையை மிக எளிதில் குறைத்துவிடமுடியும்.

◆ பல் வலி உள்ளவர்கள் சிறிதளவு துளசி இலை, மிளகு, சிறிதளவு உப்பு இவை அனைத்தையும் வலியுள்ள இடத்தில் வைத்துத் தேய்த்தால் பல் வலி குணமாகும்.

◆ குளிக்கும் போது நீரில் கொஞ்சம் துளசி இலையும் போட்டுக் குளித்து வந்தால், முகத்திலுள்ள தளும்புகள் மறையும்.

◆ வயிற்றுப் புண் குணமாக ஒரு கைபிடி அளவு கீழ்காய் நெல்லியினை அரைத்து, ஒரு டம்ளர் மோரில் கரைத்து, காலையில் குடித்துவர குணமாகும். இரத்த சோகையைக் குறைக்கும். பசியை உண்டாக்கும்.

# மெழுகுவர்த்தியும் பேனாவும்

என்னுள் ஏதோ
கருவாகி உருவாகி
வளர ஆரம்பித்தது
கண்ணுக்குத் தெரியவில்லை
ஆனால் இருப்பது புரிகிறது
அழிக்க முடியவில்லை
அகற்றும் அளவுக்குமில்லை

வர வர வளர்ந்து
எனக்குள் பிரமாண்டமானது
நான் சரி என்பவற்றை
பிழையாக்கியது
பிழை என்றால் சரி என்றது
என் கண் முன்னே
அது என்னை விழுங்கியது
தடுக்க முடியாத கோழையானேன்
கையாலாகாத பேதையானேன்

நான் அழுது அழுது
வெளிவர முயற்சிக்கிறேன்
அது முழுதாய் விழுங்கி
ஏப்பம் விட்டது
இப்போது நான் அதுவானேன்
திமிரான நடையுடன்
வெளிவந்த போது
காண்பவர் எல்லோரும்
என்னைப் போல...

செறின் மரியா

# நிஜவாழ்வின் பெண்ணவள்...



இந்தப் பிரபஞ்சத்தில் பெண் என்பவளின் தனிச் சக்தி, அவளின் ஆளுமை, அவளின் செயற்திறன் குடும்பத் தலைவியாக, நிறுவனங்களின் தலைவியாக சாதித்து நிற்கும் பெரு விருட்சம் பெண் ஆவாள்.

இந்துமா சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் தீவில் எங்கள் சொத்துக்களாக, ஆண்களுக்குச் சமனாக களமாடிய பெண்களின் வீர வரலாறுகள் போற்றும் மண்ணாக தமிழர் பிரதேசங்கள், புறநானூறில் சொல்லப்பட்டது போன்று அல்லது அதனையும் மிஞ்சிய வீர காவியங்களை வடித்த வரலாற்றுக்குச் சொந்தமான மண் எம்மண்ணாகும்.

ஆண்களுக்குச் சமனான சமுதாயம் ஒன்றை ஏடுகளில் அல்லாமல், நிஜ வாழ்க்கையில் நிலைநிறுத்தியது எம் தேசம். அவ்வாறு மேலோங்கியிருந்த எமது சமுதாய ஒழுங்கில், போரின் வடுக்களால் சிதைந்து போயுள்ள மண்ணில், குடும்பம் என்னும் வண்டியை இழுக்க குடும்பத்தின் ஆணும் பெண்ணும் சமமாக உழைக்க வேண்டிய இக்காலகட்டத்தில் அச்சாணியாகச் செயற்பட்ட ஆணின் இழப்பானது, குடும்ப வண்டியை முன்னோக்கி இழுத்துச் செல்வதற்கு பொருளாதாரம் தேவைப்படுகிறது. இன்று அச்சுமையானது பெண்ணின் தலைமேல் இறங்குகிறது.

வெறிபிடித்து அலையும் பெண்மோக ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து தப்பித்து, அன்றாடம் காய்ச்சிகளாக அடிமைப்பட்ட பெண்களாக, அவல வாழ்வு வாழ்ந்து, தமது பிள்ளைகளின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியவர்களாக,(1ம் பக்கத் தொடர்) பெண்ணாக ஈழத்தில் பெண்களின் நிலைமை மாறியுள்ளது கவலையே. நெஞ்சை நிமிர்த்தி, வீரகாவியம் படைத்த பெண்களும் இன்றைய காலகட்டத்தில், இக்கண்ணீர்க் கதைகளுக்குள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஐரோப்பிய கலாசாரங்களைப் போல், பெண்ணானவளின் வாழ்வு பாலியல் தொழிலுக்குள் சிக்குண்டு போகாத வண்ணம், தன்னம்பிக்கையுடன் இந்த சமுதாயத்தை எதிர்கொள்கின்றவளாக சுயதொழில் துறையிலும், பல்துறைத் தொழிலிலும் பெண்கள் புதுப் புரட்சியொன்றை ஏற்படுத்தி, தன்னிறைவுப் பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளில் மென்மேலும் வளரும் பக்குவத்தை உறுதியுடன் வளர்த்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறானதொரு உறுதிமிக்க மனோபலம் கொண்ட பெண்களின் பங்களிப்பே இன்றைய எமது ஈழத் தமிழர்களுக்குத் தேவையாகவுள்ளது.

**- ஜான்சி.**

# 6 ராபேல் ரக அதிநவீன போர் விமானங்களை பிரான்ஸ் நாட்டிடமிருந்து இந்தியா வாங்கியுள்ளது



ஓகஸ்ட் 02

6 ராபேல் அதிநவீன ரக போர் விமானங்களை பிரான்ஸ் நாட்டிடமிருந்து வாங்கியுள்ளது இந்தியா!

இப்போர் விமானங்களானது, ஆகாயத்திலிருந்து ஆகாயத்தில் 150 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இன்னுமொரு இலக்கை துல்லியமாகவும், தரைப் பகுதியிலுள்ள இலக்குகளை 300 கிலோ மீற்றர் தொலைவிலிருந்து தாக்கவல்லவை. இவ்விமானங்கள் முதற்கட்டமாக ஐந்து விமானங்கள் பிரான்ஸிலிருந்து கடந்த 27ஆம் திகதி இந்தியாவை வந்தடைந்துள்ளன.

## புதிய அமைச்சரவை தொடர்பில் பிரதமரின் கருத்து!

ஓகஸ்ட் -2

ஜனாதிபதியை தலைமைத்துவமாகக் கொண்ட கட்சியிலேயே பிரதமர் மற்றும் அமைச்சரவை அமையவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாவலப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் மேலும் கருத்துரைத்த பிரதமர், 69 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை வழங்கி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

அந்த செயற்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். தமது 50 வருடகால அரசியல் பயணத்தில் எதிர்க்கட்சியுடன் காணப்பட்ட போட்டித்தன்மை தற்போது இல்லாதுபோயுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## சுதந்திரமாக இடம்பெற்றது தபால்மூல வாக்களிப்பு!

ஓகஸ்ட் 02

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பு சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் இடம்பெற்றுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தலுக்கான விஷேட போக்குவரத்து!

ஓகஸ்ட் -2

பொதுத் தேர்தலை முன்னிட்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து தமது சொந்த இடங்களுக்கு சென்று மீண்டும் கொழும்புக்கு திரும்பும் மக்களுக்காக விஷேட போக்குவரத்து திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான திட்டம் கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தபபடுவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்கும் வகையில் கொழும்பு கோட்டை மத்திய பேருந்துகளை நிலையத்தில் இருந்து 100 இற்கும் அதிகமான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் வெளியிடங்களுக்கு பெரும் எண்ணிக்கையிலானோர் செல்வார்கள் என்பதினால் நாளாந்தம் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து மற்றைய பிரதேசங்களுக்கு இடையில் 800 தொடக்கம் 1000 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வாராந்த விடுமுறையை முன்னிட்டும் பொதுத்தேர்தலை முன்னிட்டும் சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் திரும்பவும் கொழும்பு நோக்கி வருவதற்காக இ.போ.ச. பேருந்துகள் பிரதேசங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

இதேபோன்று வார இறுதியில் விஷேட ரயில் சேவைகள் சிலவும் இடம்பெறவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மதுபானசாலைகளுக்கு பூட்டு!

ஓகஸ்ட் 02

எதிர்வரும் 5, 6ஆம் திகதிகளில் நாட்டில் உள்ள அனைத்து மதுபான சாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் தீர்ப்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி

ஈ.பி.டி.பி கூறுகின்ற அரசியல் நிலைப்பாட்டையே ஏனைய கட்சிகளும் பின் தொடர்கின்றன. - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெருமிதம் கொள்கிறார். மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! என்று கூறிக்கொள்ளும் இவர், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண சபையை வலுப்படுத்தி, 13 ஆவது சரத்தின் மூலம் இன்னும் கூடுதலான அதிகாரத்தைப் பெறுவதே யதார்த்தமான வழிமுறை என்கிறார்.

### சமஷ்டி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளிலுள்ள சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலான தீர்வொன்றை ஆராய்வதே தமது இலக்கு என அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார் கள்.

### ஒரு நாடு! இரு தேசம்!!

தமிழர்களது அரசியல் பெருவெளியில் ஒரு நாடு! இரு தேசம்!! என்கின்ற கருத்தியல் பற்றி அர்த்தமுள்ள அரசியல் பரவலாக்கம் இதுவாகவே இருக்கும் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வலியுறுத்துகிறார்கள்.

### கிழமைக்கொரு கொள்கை!

வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சற்றுக்காலத்திற்கு முன்னர் ஒரு நாடு! இரு தேசம்!! என்றும், சற்றுத் தூரம் நடந்துவந்து ஒரு நாடு! இரு தேசம்!! சரி-வராது என்று கூறிக்கொண்டு, சர்வ தேசத்தின் சாட்சியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றிப் பேசுகின்றார்.

### உதிரிகளாக நாமும் வெல்வோம்!

கட்சிகள் எல்லாம் கொள்கைப் பிறழ்வைக் கொண்டுள்ளதாகவும், தனிமையில் நின்று புதுமை செய்வோம்! என்று புறப்பட்டுள்ள சுயேட்சை வேட்பாளர்களும் கனவு காண்கிறார்கள். அப்படி உள்ளது நிலைமை.

## நாகரீகப் பிறழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க அரசியல்வாதிகளும் முன்வரவேண்டும்!

ஓகஸ்ட் 02

விரிந்துகிடக்கும் உலகப் பரப்பினுள் இனங்களும், சமுதாயங்களும் நாகரீகமான இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, எமது சமுதாயத் தலைவர்களாகத் தம்மை அடையாளப் படுத்தியவர்கள், தேர்தல் காலங்களாக இருந்தாலும், எதிர்ப்பு அரசியலை நியாயமாகவும், நிதானமான சிந்தனையோட்டங்களுடனும் முன்னெடுத்துச் செல்வதே எமது சமூகத்திற்கு ஆரோக்கியமானதாக அமையும்.

எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் கொள்கை ரீதியான மாறுபாடுகள் இருப்பினும், அதனை நாகரீகமான எல்லைக்குள் நின்று தமது கொள்கைப்பிடிப்பான

அரசியல் ஈடுபாட்டினை, குறிக்கோளை, பன்முகத் தன்மைசார் பார்வையை, அரசியற்தலைவர்களும், அதன் உறுப்பினர்களும், கட்சிகளும் முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகின்றது.

தேங்கி நிற்கின்ற சமூக எச்சங்களை சாக்கடையாகத் தொடர்ந்தும் தேக்கி வைக்காது, அறிவுசார் சிந்தனையில் அரசியல் நாகரீகத்தோடு, பன்மைத்துவ நோக்கோடு, சமூக விழுமியங்களில் நம்பிக்கையுடையவர்களாக எமது சமூகத்தைச் சரியானதொரு தெளிந்த அரசியல் நீரோட்டத்தில் வழிநடத்திச் செல்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

அதுவே இன்றைய எமது சமூகத்தைத் தூக்கிநிறுத்தி, ஆரோக்கியமானதொரு சமூகம் மலர்வதற்கு வழி வகுக்கும்.

## தோண்டப்பட்டது....

(1ம பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியதாகவும், இக்காலத்தில் அல்ல எக்காலத்திலும் இவ்வாறாகத் தமக்குச் சேறடிப்புக்களைச் செய்ய இயலாது என்பதையும் ஈ.பி.டி.பி கட்சியும், அதன் தலைமையும் கூறுகின்றார்கள்.

இப்பிரதேசமானது, கடந்த காலங்களில் புலிகள், இராணுவம் மற்றும் ஈ.பி.டி.பி போன்றவர்களினால் காலத்திற்குக்காலம் பயன்படுத்தப்பட்டமை

## நிராகரிக்கப்படும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான நிலை தொடராது இருப்பின், சரியான தலைவர்களைத் தெரிவு செய்வதில் ஒவ்வொரு குடி-மகனின் வாக்கும் பெறுமதிமிக்கதாக அமையும்.

# தேர்தல் களம்!



இருப்பதைப் பாதுகாத்து மேலும் முன்னேறுவதே எமது இலக்கு. இந்த இலக்கை எட்டுவதற்கான பொறிமுறையும் ஆற்றலும் எம்மிடம் இருக்கிறதென ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



தமிழர்களின் தனித்துவத்தை இல்லாதொழிப்பதற்காகவும் எம் இன மக்களை அழிப்பதற்காகவும் எமது மக்களிடமே ஜனநாயக உரிமையை பெற்றுக்கொள்ள சிலர் துடிக்கின்றார்களென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.



நாட்டு மக்களின் பொருளாதாரத்தை சக்தி உள்ளதாக மாற்றமுடியாத அரசாங்கம் இருந்தும் எவ்வித பயனும் இல்லையென ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



தங்கள் பலத்திற்காக கண்ணீர் வடித்த ஆட்சியாளர்கள் யாரும், மக்களுக்காக கண்ணீர் வடிக்கவில்லையென மக்கள் தேசிய சக்தியின் தலை வர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



இந்நாட்டிற்கு அதிகளவான வருமானம் ஈட்டித் தரும் வெளிநாட்டுத் தொழிலாளர்களைத் தற்போதைய அரசாங்கம் மறந்துவிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



நாங்கள் மக்களின் அரசியல் தீர்வுக்காகவும் உரிமைக்காகவும் உழைப்பவர்களென எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



தேர்தலுக்குப் பிறகு புதிய அரசியல் அமைப்பு, கொண்டுவரப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



இந்தத் தேர்தலில் களமிறங்கி இருப்பவர்கள் தமிழ் மக்களுடைய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவார்களா? என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



முகநூலில் வீரவசனம் பேசுபவர்கள் போராளிகள் அல்லர். அவர்கள் எதுவித போராட்டங்களிலும் பங்கெடுக்காதவர்களென கருணா அம்மான் குற்றஞ்சாட்டியுள்ளார்.




## ஐ.தே.கவுக்குள் அதிரடி மாற்றம்?

ஒகஸ்ட் 02

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 37 பேரின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளதாக, கட்சியின் உறுப்பினரான நிசங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கிய 115 உறுப்பினர்களின் உறுப்புரிமை நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 5,814 தேர்தல் முறைப்பாடுகள்!

ஒகஸ்ட் -2

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் புதிதாக 213 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 28ஆம் திகதி மாலை 4.00 மணி முதல் 29 ஆம் திகதி மாலை 4.00 மணி வரையான காலப்பகுதியில் குறித்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இதுவரை 1,068 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மாவட்ட தேர்தல்கள் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 4,746 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5,814 ஆக அதிகரித்துள்ளது.

திருமண விடயங்கள், காணி, வீடு விற்பனை, வீடு குத்தகை, வியாபார விளம்பரங்கள், தேர்தல் பிரசார விளம்பரங்கள், விழாக்கள், மரண அறிவித்தல் போன்ற சகல விளம்பரங் களையும் "எழுச்சி" பத்திரிகை ஊடாக கட்டணம் செலுத்தி பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:
திரு.ந.ராஜமனோகரன்,
இல. 76, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல.: 0772576536
மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com

**உண்மையை உரக்கச் சொல்வோம்...**

இப்பத்திரிகை Companian Farm (PVT) Ltd. நிறுவனத்தினரால் இல.34, பிறவுண்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஜெயஸ்ரீ அச்சகத்தில் 02.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.